செய்தி வெளியீடு எண்: 251 நாள்: <u>21.3.2010</u>

<u>செய்தி வெளியீடு</u>

## <u>மும்பையிலிருந்து வெளிவரும் ‘‘மராத்திய முரசு’’ தமிழ் நாளிதழில் பணிபுரிந்து மறைந்த பத்திரிகையாளர் குடும்பத்திற்கு 2 இலட்ச ரூபாய் நிதியுதவி!</u>

# <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை!</u>

தமிழகத்தில் பத்திரிகைத் துறையில் பணியாற்றி வருவோரின் நலன் கருதி, அவர்கள் பணியாற்றும் காலத்தில் இறந்துவிடுவார்களேயானால், அவர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாக்கும் பொருட்டு, 20 ஆண்டுகள் பணிபுரிந்து இருந்தால் அவர்கள் குடும்பத்திற்கு 2 இலட்ச ரூபாயும், 15 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒன்றரை இலட்ச ரூபாயும், 10 ஆண்டுகள் பணிபுரிந்திருந்தால் ஒரு இலட்ச ரூபாயும் பத்திரிகையாளர் குடும்ப நல நிதியுதவியாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடும் புதிய திட்டம், 19.9.2006 முதல் இந்த அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, மும்பையிலிருந்து வெளிவரும் “மராத்திய முரசு” என்ற தமிழ் நாளிதழில் நிர்வாக ஆசிரியராக 24 ஆண்டுகள் பணியாற்றி, 3.12.2004 அன்று இயற்கை எய்திய எஸ்.ஜெபராஜ் என்பவரின் மனைவி திருமதி சுசீலா ஜெபராஜ் அவர்களுக்குச் சிறப்பு நிகழ்வாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு இலட்ச ரூபாய் பத்திரிகையாளர் குடும்ப நலநிதி உதவியாக வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.